# 2021 புத்தாண்டின் சிறப்பு வழிப்பாடு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமேன்.

**முன்னுரை.**

2020 ஆம் ஆண்டில் இருந்து நாம் விடைப்பெற வேண்டிய இத்தருணத்தில், இவ்வாண்டின் மகிழ்சிகளையும் துயரங்களையும் நாம் நினைவில் கொள்வோம். தொற்றுநோய் அதன் தொடர்புள்ள சவால்களையும் நாம் எதிர்கொள்ள கடவுள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பதனையையும் அவரின் மீட்பின் முக்கியத்தையும் நாம் உணர்கின்றோம். நிச்சயமற்ற மற்றும் இழப்பின் வேதனையின் தருணங்களில், நமது ஆரோக்கிய அன்னையின் பரிந்துரையின் வழியாக இயேசுவின் திரு இருதயம் நம்மை அன்போடு தாங்கி வழிநடத்துகின்றார்.

சிறிது நேரம் அமைதியாக இருந்து , கடந்த ஆண்டினை நமது சிந்தனைக்குக் கொண்டு வருவோம். கடந்து ஆண்டு முழுவதிலும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த கடவுளின் நன்மைகளுக்காக அவருக்கு நன்றிக்கூறும் இவ்வேளையில், நாம் செய்த குற்றங்களுக்காகவும் அவரிடம் மன்னிப்புக் கேட்டு மன்றாடிடுவோம்.

1. இத்தொற்று நோய் காலத்தில் அச்சமும் கலக்கமும் மற்றும் எதிர்மறையான உணர்வுகள் தோன்றும் வேளையில் சிலசமயம் சக்திவாய்ந்த கடவுளின் வல்லமையில் நாங்கள் நம்பிக்கை இழந்து விடுவதற்காக:-
   **ஆண்டவரே இரக்கமாயிரும்!**

   **பதில்: ஆண்டவரே இரக்கமாயிரும்.**

2. சில சமயங்களில் நம்முடைய சொந்த தேவைகளுகாகவும் சுயநலங்களுக் காகவும் மற்றவர்களின் தேவைகளை முக்கியமாக ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள், கைவிடப்பட்டோர், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நோய்வாய்பட்டவர்களின் முக்கிய தேவைகளைப் பூர்த்திச்செய்ய தடையாக இருப்பதற்காக:-
**கிறிஸ்துவே இரக்கமாயிரும்!**

**பதில்: கிறிஸ்துவே இரக்கமாயிரும்.**

3. நமது ஆன்மீகதிற்கும் குடும்ப தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், கடவுள் மற்றும் குடும்ப உறவுகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியதற்காக:-
**ஆண்டவரே இரக்கமாயிரும்!**

**பதில்: ஆண்டவரே இரக்கமாயிரும்.**

2021 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாம், கடவுளின் ஆவி நம்மை நிரப்பி , எல்லா வற்றிற்கும் மேலாக அவரின் விருப்பத்தின் படி, விவேகத்துடன் முடிவுகள் எடுத்திட எங்கள் இதயத்தையும் மனதையும் திறந்திடவும் மற்றும் ஞானம், வலிமை, திறன் வழியாக விசுவாசம், நம்பிக்கை, அன்பினைப் பேனிக்காத்திட நாம் எதிர்நோக்குடன்: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல் வழியாக நம் இறைவனிடம் மன்றாடிடுவோம்.

## தியானிப்பதற்கும் & பிரார்த்தனைக்கும் இறைவசனம்

எசாயா 40:31 - ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர்; அவர்கள் ஓடுவர்; களைப்படையார்; நடந்து செல்வர்; சோர்வடையார்.

## மன்றாட்டு:

விண்ணகத்தில் இருக்கின்ற எங்கள் தந்தையே, நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் குடும்பமும் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தில் நுழைகையில் எங்களுக்கு வழித்துணையாக இருந்திடவும், உமது குரலுக்குச் செவிசாய்த்து ஊக்கத்துடன் விசுவாச நம்பிக்கையில் உம்மைப் பின்தொடர உமது ஞானத்தை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென:-

**ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.**

**ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

எரேமியா 29:11 - ஏனெனில், உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல, என்கிறார் ஆண்டவர்.

மன்றாட்டு:

நம்பிக்கையின் ஆண்டவரே! அனைத்து நாட்டின் தலைவர்களும், அப்பாவிகளுக்கு பாதுகாப்பளித்திடவும் ஏழைகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்து இவர்கள் தன்மானத்துடன் வாழச்செய்திடவும் மற்றும் தற்போதைய நெருக்கடியிலிருந்து உலகை மீட்டு வழி நடத்திடவும், தொலைநோக்கு சிந்தனையுடன் மன தைரியத்தையும் உமது ஆற்றலையும் இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென:-

**ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.**

**ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.**

நீதிமொழிகழ் 3:5-6 - முழுமனத்தோடு ஆண்டவரை நம்பு, உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே. நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனத்தில் வைத்துச் செய், அப்போது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார்.

மன்றாட்டு

இரக்கமுள்ள ஆண்டவரே, கோவிட்19 கொள்ளை நோயிற்குத் தீர்வுக்கான பாதுக்காப்பான மற்றும் பயனுடைய தடுப்பு மருந்தினை உருவாக்க நேரடியாகவோ மறைமுகமாகவோ பணியாற்றி வருகின்றவர்களுக்கு நல்ல ஆற்றலையும் ஊக்கத்தையும் தந்து , அனைவரையும் உமது திரு இருதயத்தில் எரிகின்ற அன்பு தீயால் பாதுகாத்தருள:-

**ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.**

**ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.**

ஆண்டவர் நமக்கு கற்றுத்தந்த இறைவேண்டல், **கர்த்தர் கற்பித்த** ஜெபத்தைச் சொல்வோம்

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக.
உமது ஆட்சி வருக.
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,
மண்ணுலகிலும் நிறைவேறுக.
எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தாரும்.
எங்களுக்கு எதிராக் குற்றம் செய்வோரை,
நாங்கள் மன்னிப்பது போல,
எங்கள் குற்றங்களையும் மன்னியும்.
எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்.

## இறுதி செபம்

நித்திய தந்தையே, நாங்கள் 2021 ஆம் ஆண்டில் நுழைகையில், நீர்தாம் எங்கள் இம்மானுவேல் "கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்பதனை நாங்கள் என்றும் நினைவில் கொள்ள எங்களுக்குத் துணைப்புரியும். நீர் எங்களுக்குப் புது வாழ்வும், சமாதனமமும், நம்பிக்கையும் அளிக்க வந்தீர். உமது அருளையும் ஆசீரையும் அளித்து இந்தத் தொற்றுநோயிலிருந்து எங்களை பாதுக்காத்தருளும். தொடர்ந்து எதிர்பார்ப்புடன் வழகின்ற எங்கள் வாழ்கையின் வழியாக உமது ஒளியை ஒளிரச் செய்து உமது ஆவியின் கொடைகளான, நம்பிக்கையின் மூலமாகவும் ,வாழ்கையின் மூலமாகவும், கொடுப்பதின் மூலமாகவும் இவ்வுலகில் மாற்றத்தைக் கொண்டுவருவோம்.

இறைவனின் தாய் பெருவிழாவான இன்று, அவரின் தயவைக்கேட்டு மன்றாடுவோம்.

அருள் நிறைந்த மரியே வாழ்க,
ஆண்டவர் உம்முடனே.
பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே,
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும்
ஆசி பெற்றவரே. புனித மரியே இறைவனின் தாயே
பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக,
இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும்
வேண்டிக்கொள்ளும். ஆமேன்.

புனித சூசையப்பர் ஆண்டிற்கான செபம்.

மீட்பரின் பொறுப்பாளரே,
தூய கன்னி மரியாவின் துணையாளரே, வாழ்க!
கடவுள் தமது ஒரே திருமகனை
உம்மிடம் ஒப்படைத்தார்;
உம்மிடமே மரியா தனது
முழு நம்பிக்கையையும் கொண்டிருந்தார்;
உம்முடனே கிறிஸ்து மனிதரானார்.
பேறுப்பெற்ற கனவின் சூசையப்பரே,
எங்களுக்கும் உம்மையே ஒரு தந்தையாகக் காட்டி,
வாழ்வின் பாதையில் எங்களை வழிநடத்தும்.
அருள், இரக்கம், தைரியத்தைப் பெற்றுத் தாரும்;
அனைத்து தீமைகளிலிருந்தும்
எங்களைப் பாதுக்காத்தருளும். ஆமேன்!

## இறுதி ஆசீர்வாதங்கள்

### (எண்ணிக்கை 6:24-26)

ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக.

**ஆமேன்.**

ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன்மீது அருள் பொழிவாராக.

**ஆமேன்.**

ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக.

**ஆமேன்.**

**(தொடக்கம் மற்றும் இறுதியில் பொருத்தமான பாடல்களை நீங்கள் தேர்ந்துக் கொள்ளலாம்)**